# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 42 — 1973 ජනවාරි 12 වැනි සිකුරාද — 1973.01.12

42 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 17 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 17 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 22 |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


குறிப்பு.—நிதி (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியின் பகுதி II ற்கு குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மற்றைய நியமனங்களும் பிறவும்

**1973 இன் இல. 10**

எண் : ஜி. பீ. 4/1 (ii)

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரானவர் பின்வரும் பொலிசுப் பரிசோதகர்களை 1972, நவெம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளர்களாகப் பதிற் கடமையாற்றும்வண்ணம் கட்டளையிட்டுள்ளார் :—

திரு. என். ஏ. வீரக்கொடி
திரு. ஸட். சி. ஈ. விஜேசூரிய
திரு. எம். மகேஸ்வரன்

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 1,
1972 ம் ஆல் திசெம்பர் மீ.

1–471

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை அரசியலமைப்பு 1972**

**119 ஆம் பிரிவின் கீழ் கையளிப்புக்கட்டளை**

நீதியமைச்சர் நாணயக்காரபத்திராகே மாட்டின் பெரேரா ஆகிய நான், இலங்கை அரசியல் அமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய தொடக்கச் சம்பளத்திட்டத்திலுள்ளவர்களாய் இத்துடனுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள திணைக்களங்களில் சேவை செய்யும் அரச உத்தியோகத்தர்களை வேலை நீக்கஞ் செய்வதற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான தத்துவங்கள் யாவும், இப்போதய இலங்கை அரசியலமைப்புக்கு முன்னிருந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டவாறு பிற ஏற்பாடுகள் அல்லது மேலும் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, சொல்லப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அவ்வவற்றுக்கான கையளிப்புக்கட்டளைகளிலும் விதிகளிலும் தரப்பட்டுள்ளவாறு தேவையான மாற்றங்களுடன், அதே நிபந்தனைகள், நியதிகளுக்குக் கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களாகக் கருதப்படல்

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆல் மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

வேண்டுமெனவும், பின்வரும் நிபந்தனைகட்கமைவாயிருத்தல் வேண்டு மெனவும் நான் இத்தால் கட்டளையிடுகின்றேன் :—

(அ) அத்தகைய தத்துவங்கள், இப்பொழுது ஒழுக்காற்று விதிகளுக் கிணங்கவும் அமைச்சர் சபையினால் அல்லது என்னால் காலத்துக் குக்காலம் வழங்கப்படக்கூடிய இத்தகைய மேலும் பிற அறிவுறுத்துரைகட்கிணங்கவும் பிரயோகிக்கப்படல் வேண்டும் ;

(ஆ) அரச உத்தியோகத்தர் வேலை நீக்கஞ் செய்யும் அல்லது பிற தண்டனை விதிக்கும் தத்துவம் எதனையும் அரசியலமைப்பின் 119 (1) ஆம் பிரிவின் பிரகாரம், அத்தகைய அரச உத்தி யோகத்தருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தண்டனை விதிக்கும் தத்துவங்கள் என்னால் பிரயோகிக்கப்படல் வேண்டு மென நான் தீர்மானிக்கும் எவ்விடயத்திலும் பிரயோகிக்க லாகாது ;

(இ) என்னால் கையளிக்கப்பெற்ற தத்துவங்களின் கீழ் வேலை நீக்கக் கட்டளை உட்பட ஒழுங்காற்று விடயம் சம்பந்தமான ஒரு கட்டளையினால் இடர்ப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அதற்கெதிராக அரசியலமைப்பின் 119 ஆம் பிரிவின் கீழ் தேவைப்பட்டவாறு அரச சேவை ஒழுக்காற்றுச்சபைக்கு அல்லது எனக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒழுக்காற்று விதிகள் அல்லது அமைச்சரவையினால் அல்லது என்னால் வழங்கப்பட்ட பிற கட்டளைகள் அல்லது மேலுங் கட்டளைகள் ஆகியவற்றுக்கமைவாய், முன்னர்க் கூறியது போல முந்திய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்படாத ஆனால், அதனால் பிரயோகிக்கப்பட்ட வேலை நீக்கத் தத்துவங்கள், ஆண்டொன்றுக்குத் தொடக்கத் திரட்டிய சம்பளமாக 6,720 ரூபாவுக்குக் குறைவாகப் பெறும் அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக இதனகத் துள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு திணைக் களத் தலைவரினாலும் இப்பொழுது பிரயோகிக்கப்படல் வேண்டுமெனவும் நான் இத்தால் கட்டளையிடுகின்றேன்.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
1972, ம் ஆண்டு திசம்பர் மீ 23 ந் வ.

**அட்டவணை**

நிதி அமைச்சின் அலுவலகம்

பொதுத் திறைசேரி

உண்ணாட்டு இறைவரித் திணைக்களம்

சுங்கத் திணைக்களம்

விலைமதிப்புத் திணைக்களம்

உண்ணாட்டுப் பொருள்வரித் திணைக்களம்

கடன் சபை.

1–472

---

**கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்**

**அறிவித்தல்**

1972 ம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ம் தேதி தொடக்கம் 3 ஆண்டுக் காலம், விசுக்கோத்து, இனிப்புவகை (சொக்கிலேற்று உற்பத்தி உட்பட) உற்பத்தித் தொழிலுக்கான கூலி நிருணய சபையில் உறுப்பினராயிருப் பதற்கு (சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமான) கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் 9 ம் பிரிவுக்கமையத் தொழில் அமைச்சரவர் கள் பின்வருவோரை மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென 1971 ம் ஆண்டுக் கூலி நிருணய சபை ஒழுங்குவிதிகளின் 30 ம் ஒழுங்குவிதிக் கமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 28 ந் வ.

நியமன உறுப்பினர் :

1. கலாநிதி கமல் கருணநாயகா.
2. திரு. பி. டபிளியு. ஜயசூரியா.
3. திரு. எல். ஆர். பெரேரா.

தொழில் வழங்குவோர் பிரதிநிதிகள் :

1. திரு. ஈ. டீ. வீரக்கூன்.
2. திரு. கே. ஜீ. என். செனிவிரத்தின.
3. திரு. எல். பி. பெரேரா.
4. திரு. ஓவான் குணவர்த்தன.
5. திரு. கே. உவில்லியம் சிங்கோ.
6. திரு. எவ். கருணகலகே.
7. திரு. ஏ. பீ. சுந்தரராஜ் கக.
8. திரு. எஸ். சிவராசா.
9. திரு. ஜீ. டீ. விக்கிரமரத்தின.
10. திரு. ஈ. எஸ். அப்பாத்துரை.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

1. திரு. எம். எம். செனிவிரத்தின.
2. திரு. எம். சி. எம். ஷாவி.
3. திரு. எச். டபிள்யு. கல்தேரா.
4. திரு. எம். பீ. பிலப்பிட்டியா.
5. திரு. எம். ஏ. ஹனிவா.
6. திரு. ஆர். பீற்றர்.
7. திரு. ரீ. ஆர். கான்.
8. திரு. எஸ். சிறிவர்த்தன.
9. திரு. எட்வேட் பொத்தேச்சு.
10. திரு. எல். டபிளியு. பண்டிதா.

1–427

---

**1954 ம் ஆண்டின் கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) ஒழுங்குவிதிகள்**

ஊதிய மன்றுகள் அமைக்கப்படுவதற்கான உறுப்பினர் குழு,

(1) தொழில் ஆணையாளரையும் ;

(2) 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் தேதி தொடக்கம் கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டத்தின் (சட்டவாக்கங்களின் 129 ம் அத்தியாயம்) 25 (1) ம் பிரிவின்கீழ் அமைச்சரால் நியமிக்கப்பட்ட பின்வருவோரை யும் ;

கொண்டதாய் அமைந்திருக்குமென, 1954 ம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 15 ந் தேதிய 10,724 ம் இலக்கக் கசற்றில் பிரசுரிக்கப்பட்ட 1954 ம் ஆண்டின் கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்கு படுத்துகை) ஒழுங்குவிதிகளின் 31 ம் ஒழுங்குவிதியின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

(அ) தொழில் வழங்குவோர் பிரதிநிதிகள் :

1. திரு. டீ. எஸ். இளையபெருமா
2. திரு. கே. வீ. குணசேன
3. திரு. எச். போல் சில்வா
4. திரு. டீ. பிரெட் ஜயசிங்கா
5. திரு. ஜீ. ரீ. எவ். பர்ணாந்து
6. திரு. சீ. விஜயநாயகா
7. திரு. எம். டபிள்யு. ஜயரத்தினம்
8. திரு. தொம்மி பர்ணாந்து
9. திரு. ஏ. சங்கதாச சில்வா
10. திரு. ஜோய் எவ். பெரைரா
11. திரு. ஜே. அபேவிக்கிரமா
12. திரு. என். சேவாக்கிரம்.

(ஆ) தொழிலாளர் பிரதிநிதிகள் ;

1. திரு. விமலசிறீ த மெல்
2. திரு. என். சண்முகதாசன்
3. திரு. எல். டபிள்யு. பண்டிதா
4. திரு. எஸ். செல்லையா
5. திரு. ஏ. டீ. ஈ. விஜயதுங்கா
6. திரு. உவால்ரர் ஜோதிபாலா
7. திரு. தொனல்ட் இரத்தினவீரா
8. திரு. டபிள்யு. எல். பர்ணாந்து
9. திரு. பி. சுமதிரத்தின
10. திரு. எம். பி. எச். எம். பீரிஸ்
11. திரு. ஒஸ்வின் பர்ணாந்து
12. திரு. டபிள்யு. கே. விஜேமான்னே.

(இ) நியமன உறுப்பினர் :

1. திரு. பி. ஆர். விக்கிரமநாயகா
2. திரு. ஏ. எச். எம். பௌசி
3. திரு. ஏ. அகஸ்டின் டயஸ்
4. திரு. டபிள்யு. மல்லிமாராட்சி
5. திரு. டீ. அல்பிரட் த சில்வா
6. திரு. பீ. சிறீதரன்
7. திரு. ஜே. டீ. சீ. பெரேரா
8. திரு. ஏ. டீ. கனகரத்தின
9. திரு. சீ. ஈ. சிமித்திராராய்ச்சி
10. திரு. பி. விமலச்சந்திரன்
11. திரு. ஆர். ஆர்.செல்வத்துரை.

ஏ. ஈ. கோகளி மொரகொடை,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

கொழும்பு.
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 28 ந் உ.

1–378

---

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

விலைக் கட்டுப்பாட்டுச்சட்டம் (அதிகாரம் 173) பிரிவு 4 (7) ன் கீழ் விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானுவிதப் பொருட்களும்) யால் ஆக்கப் பட்டதும், 1972 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ம் திகதிய 28/5 எனும் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான 1972 ம் ஆண்டின் (வெள்ளொளி மன்ரில்கள்) விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை இலக்கம் 3 ஐ வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கள் அங்கீகரித்துள்ளார் என இதன்மூலம் சகலரும் அறியத்தருகிறேன்.

ஜயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 23 ந் உ.

1–305/1

---

**விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (அதிகாரம் 173) பிரிவு 4 (7) ன் கீழ் (உணவும் நானுவிதப் பொருட்களும்) விலைக்கட்டுப்பாட்டதிகாரியால் ஆக்கப்பட்டதும் 1972 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9 ம் திகதிய 28/5 எனும் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான 1972 ம் ஆண்டின் (சனற்றஜன்) விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை இலக்கம் 1 ஐ யும், (சஸ்டஜன்) 1972 ம் ஆண்டின் விலைக்கட்டுப்பாட்டுக்கட்டளை 1 ஐ யும் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கள் அங்கீகரித்துள்ளார் என இதன்மூலம் சகலருமறியத்தருகிறேன்.

ஜெயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 22 ந் உ.

1–305/2

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

**கட்டளை**

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட வாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1971 மே மாதம் 7 ஆம் தேதிய 14,957 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணை யில் 21 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தி லுள்ள உடபலாத கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்கு வோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக் கின்றேன் :—

1. பக்கியெல்லே, இல. 36/152 ஐச் சேர்ந்த வீரசிங்க ஆரச்சிகே கேமபால அவர்கள்.
2. பக்கியெல்லே, இல. 36/47 ஐச் சேர்ந்த ரணவீர ரத்தினத் திலக பளிகன வளவ்வே ரன்பண்டா அவர்கள்.
3. பக்கியெல்லே, ரஜகலதென்னே, இல. 34/112 ஐச் சேர்ந்த அழுத்கே சேதன்சிஞ்ஞோ அவர்கள்.
4. பக்கியெல்லே, பரணகமை, இல. 3/12 ஐச் சேர்ந்த சமரக் கோன் முதியன்சேலாகே விதானெகெதர விஜயரத்தின மஹவல அவர்கள்.
5. பக்கியெல்லே, கொணுகொல்லே, இல. 33/117 ஐச் சேர்ந்த மாரசிங்க முதியன்சேலாகே சுதுபண்டா மாரசிங்க அவர்கள்.
6. பக்கியெல்லே, கலபிட்டகலே, இல. 32/153/3 ஐச் சேர்ந்த மாயிணுகொடகே எட்வின் குணபால அவர்கள்.
7. பக்கியெல்லே, கலபிட்டகலே நிவச, இல. 32/50 ஐச் சேர்ந்த டார்லிஸ் சிஞ்ஞோ சுதுசிங்க அவர்கள்.
8. கொகொம்பானே, கொத்மலைக் குடியேற்றம் இல. 55 ஐச் சேர்ந்த அழுத்துரகே குணசேகர அவர்கள்.
9. பக்கியெல்லே, கோணகலே, இல. 31/146 ஐச் சேர்ந்த கேரத் முதியன்சேலாகே புஞ்சிபண்டார அவர்கள்.
10. கொகொம்பானே, மாயாதுன்னே, இல. 30/81 ஐச் சேர்ந்த கமகே தொன் சேதன் சிஞ்ஞோ அவர்கள்.
11. கொகொம்பானே, சேனுகமை, இல. 29/24 ஐச் சேர்ந்த சமரதுங்க தேவயலாகே விஜயபால அவர்கள்.
12. கொகொம்பானே, வெரங்கெட்டகொடை, இல. 28/83 ஐச் சேர்ந்த வீரதுங்க ஆரச்சிகே கின்னி அப்புகாமி அவர்கள்.
13. கொகொம்பானே, வலகம்புரம், இல. 27/83 ஐச் சேர்ந்த சுபசிங்க முதியன்சேலாகே கேரத் அவர்கள்.
14. கொகொம்பானே, பரணகமை, இல. 7/102 ஐச் சேர்ந்த வனசிங்க முதியன்சேலாகே தர்மசேகர அவர்கள்.
15. கொகொம்பானே, பண்டாரதூவைச் சேர்ந்த தலாபண்டார லாகே குணவர்த்தன அவர்கள்.

(ஆ) பக்கியெல்லே, இல. 36/152 ஐச் சேர்ந்த வீரசிங்க ஆரச்சிகே கேமபால அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராக விருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகாலதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசம்பர் மீ 28 ந் உ.

1–362/1

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

**கட்டளை**

ஸ்ரீ லங்கா இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட வாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரம நாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1971 மே மாதம் 7 ஆம் தேதிய 14,957 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணை யில் 22 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தி லுள்ள மெதபலாத கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பின ராக நியமிக்கின்றேன் :—

1. உஹனே, குமாரிகமை, ப. நோ. கூ. சங்கம், இல. 20 ஐச் சேர்ந்த மாகொட்டு தமரராலலாகே ஜயசேன அவர்கள்.

2. உஹனே, 23/139 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே குணத்திலக அவர்கள்.
3. பரகாகெலே, இல. 2/9 ஐச் சேர்ந்த அத்தநாயக்க முதியஞ் சேலாகே திசாகாமி அத்தநாயக்க அவர்கள்.
4. உஹனே, குமாரிகமை, ஜயசிறி ஸ்ரோர்சைச் சேர்ந்த ஒகந்த பொல ஆரச்சிகே சுரவீர அவர்கள்.
5. உஹனே, இல. 20/38 ஐச் சேர்ந்த வேரவெல்லலாகே நந்துவா அவர்கள்.
6. உஹனே, இல. 22/105 ஐச் சேர்ந்த ரங்கொத் கெதர தந்தசேன அவர்கள்.
7. உஹனே, தெம்பிட்டமல்பெலெஸ்சை, இல. 22/80 ஐச் சேர்ந்த மீகொன்பட்டி கெதர கிரா அவர்கள்.
8. உஹனே, குமாரிகமை, இல. 15 ஐச் சேர்ந்த எதிரிசூரிய முதியஞ்சேலாகே சிறிவர்த்தன அவர்கள்.
9. உஹனே, குமாரிகமை, குடியேற்றத்திட்டம் இல. 20/118 ஐச் சேர்ந்த சிங்கப்புலி முதியஞ்சேலாகே திலகரத்தின ராலகாமி அவர்கள்.
10. உஹனே, இல. 24/76 ஐச் சேர்ந்த கேவா ஜுலிகே செமியெல் அவர்கள்.
11. உஹனே, கிமிதுராவை, இல. 40 ஐச் சேர்ந்த நாரங்கொட்டுவே கெதர சேகர அவர்கள்.
12. உஹனே, கிமிதுராவை, இல. 26 ஐச் சேர்ந்த மில்லகஹ மெதகெதர ஜயசேன அவர்கள்.
13. உஹனே, கலகிட்டியாகொடை, இல. 23/154 ஐச் சேர்ந்த கல்பாகொட முதியஞ்சேலாகே பொடி அப்புகாமி அவர்கள்.
14. உஹனே, கல்முனை வீதி, இல. 5 ஐச் சேர்ந்த கேரத் முதியஞ் சேலாகே சபாநாயக்க அவர்கள்.
15. உஹனே, திஸ்ஸபுரம், இல. 21/122 ஐச் சேர்ந்த கியூன் கெல்ல ராலலாகே தர்மதாச அவர்கள்.
16. உஹனே, திஸ்ஸபுரம், இல. 21/37 ஐச் சேர்ந்த சேனநாயக்க அமரசிங்கே பிரேமரத்தின அவர்கள்.

(ஆ) உஹனே, குமாதிகமை, ப. நோ. கூ. சங்கம், இல. 20 ஐச் சேர்ந்த மாகொட்ட கமராலலாகே ஜயசேன அவர்களை மேற் சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசம்பர் மீ 28 ந் வ.

1–362/2

---

## இணக்கச் சபைகள் சட்டம்

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(7) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெல்மடுல்லைக் கிராமப் பகுதிக் கென 1970 நவம்பர் மாதம் 20 ஆம் தேதிய 14,933 ஆம் இலக்கக் கசெற்றறிவித்தல் மூலம் அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்தின் உறுப்பினரான ஒபநாயக்கா, மொரதொட்டையைச் சேர்ந்த வீரக்கோன் ஆரச்சிகே சிறிசேன வீரக்கோன் அவர்களை அப்பதவியிலிருந்து நீக்கு கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு.
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 28 ந் வ.

1–361

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 ஆம் யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 ஆகத்து மாதம் 28 ஆம் தேதிய 14,921 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 9 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட அநுராதபுர மாவட்டத்திலுள்ள கிரளவக் கோரளை கிழக்குக் கிராமப் பகுதிக் கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) மடாட்டுகமை, கிதுல்கிட்டியாவையைச் சேர்ந்த ரீ. பீ. தசநாய யக்க அவர்கள்
(2) மடாட்டுகமை, " நிகதமானி " ஐச் சேர்ந்த ஓ. எம். அப்துல் காதர் அவர்கள்
(3) மடாட்டுகமை, பண்டாரபொத்தானையைச் சேர்ந்த எம். எம். முகம்மது அலி அவர்கள்
(4) கலேவெலே, தம்புகல்மில்லவெவையைச் சேர்ந்த பீ. பீ. பியசேன அவர்கள்
(5) மடாட்டுகமை, கெவெந்தென்னேகமையைச் சேர்ந்த எச். ஜீ. என். பந்துசேன அவர்கள்
(6) கல்கிரியாகமை, ரனவையைச் சேர்ந்த ஆர். கே. விஜேரத்தின அவர்கள்
(7) மடாட்டுகமை, கொட்டாகலேயைச் சேர்ந்த கழுபண்டாகே ரன்பண்டா இவர்கள்
(8) மடாட்டுகமை, கிதுல்கிட்டியாவை, 1074 ஐச் சேர்ந்த கே. டீ. ஜயசேகர அவர்கள்
(9) மடாட்டுகமை, உடனிரிகமையைச் சேர்ந்த எம். முகம்மது இஸ்மாயில் அவர்கள்
(10) தேவகுவை, நாரங்கஸ்வெவை, 12/9 ஐச் சேர்ந்த சந்திர ரத்தின தென்னக்கோன் அவர்கள்
(11) தேவகுவை, நாரங்கஸ்வெவையைச் சேர்ந்த கே. எம். எச். பண்டார அவர்கள்
(12) கலேவெலே, தம்புகல்மில்லேவை, கெலதின்னன்வெவையை சேர்ந்த டீ. சந்தா அவர்கள்
(13) மடாட்டுகமை, கெவெந்தென்னேகமையைச் சேர்ந்த கே. பீ. திசாநாயக்க அவர்கள்
(14) தேவகுவை, நாரங்கஸ்வெவை, 8/95 ஐச் சேர்ந்த எச். எம். ஜயதிலக அவர்கள்
(15) மடாட்டுகமை, கிதுல்கிட்டியாவையைச் சேர்ந்த கே. ஜீ. டேவிட் அவர்கள்
(16) கலேவெலே, கெலேகல்மில்லவெவையைச் சேர்ந்த என். பீ. கபுரால அவர்கள்
(17) மடாட்டுகமை, கொட்டகலேயைச் சேர்ந்த பீ. முதுபண்டா அவர்கள்
(18) தேவகுவை, 12/9 ஐச் சேர்ந்த ரீ. எம். கெந்திரிக் அப்புகாமி அவர்கள்
(19) தேவகுவை, 29/9 ஐச் சேர்ந்த யூ. ரொமா அவர்கள்

(ஆ) மடாட்டுகமை, கிதுல்கிட்டியாவையைச் சேர்ந்த ரீ. பீ. தசநாயக்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக் கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1972, திசம்பர் 23 ஆம் நாள்.

1–555/1

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972, யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்த லுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 மாச்சு மாதம் 24 ஆம் தேதிய 15,003 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 10 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட குருநாகலை மாவட்டத்திலுள்ள மாகந்துறைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப் பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப் பினராக நியமிக்கின்றேன் :—

(1) கோனுவிலே, மாகந்துறையைச் சேர்ந்த சமரப்புலி ஆரச்சிகே பியசேன அவர்கள்

(2) கோனுவிலே, கெண்டியக்கலே, ரத்தினவிலாவைச் சேர்ந்த நவரத்தின அதிகாரி முதியஞ்சேலாகே சமரசேன அவர்கள்

(3) கோனுவிலே, கோனுல்லேயைச் சேர்ந்த சுபசிங்க முதியஞ்சே லாகே கருணுரத்தின அவர்கள்

(4) கோனுவிலே, கோனுல்லே, "நேரஞ்சா" ஐச் சேர்ந்த அழகிய வண்ண மொகொட்டாலலாகே திலகரத்தின அவர்கள்

(5) கு/கோனுவிலே, நாலவலானே, "சிறிதிரி" ஐச் சேர்ந்த ஜயக்கொடி ஆரச்சிகே அந்தனி அப்புகாமி அவர்கள்

(6) லீகிரியாகமை, கெட்டிரிப்புவைச் சேர்ந்த இங்குறுவத்தகே மயிக்கல் வென்சஸ்லாவுஸ் பர்நாந்து அவர்கள்

(7) லீகிரியாகமை, கெட்டிரிப்பு, பஞ்சல வீதியைச் சேர்ந்த அபேசிங்க முதியஞ்சேலாகே சய்மன் அபேசிங்க அவர்கள்

(8) வெலிபென்னகாமுல்லே, பன்னரையைச் சேர்ந்த ரத்நாயக்க முதியஞ்சேலாகே டிங்கிரிபண்டா அவர்கள்

(9) கோனுவிலே, மாகந்துறையைச் சேர்ந்த ஜயசுந்தர முதியஞ்சே லாகே தர்மதாச அவர்கள்

(10) வெல்பன்னேயைச் சேர்ந்த அதிகாரி முதியஞ்சேலாகே சிரி முதியஞ்சே அதிகாரி அவர்கள்

(11) வெல்பன்னேயைச் சேர்ந்த குருப்பு முதியஞ்சேலாகே அமரசீல ரத்நாயக்க அவர்கள்

(12) லீகிரியாகமை, கெட்டிரிப்புவைச் சேர்ந்த அபேசிங்க முதியஞ் சேலாகே பியதாச அபேசிங்க அவர்கள்

(13) சந்தலங்காவை, இரபடகமையைச் சேர்ந்த மண்டலவல்லி ஆச்சாரிகே மகிந்த பீரிஸ் அவர்கள்

(14) கோனுவிலே, நாலவலானேயைச் சேர்ந்த மாரசிங்க முதியஞ் சேலாகே எஸ்பின் சிஞ்ஞோ அவர்கள்

(15) கோனுவிலே, நாலவலானேயைச் சேர்ந்த விதாரணகே ஜோசப் மரியா பர்நாந்து அவர்கள்

(16) சந்தலங்காவை, இரபடகமையைச் சேர்ந்த ரத்வத்தேகே ஆரியரத்தின அவர்கள்

(17) சந்தலங்காவை, கலகெதரையைச் சேர்ந்த கஜமுது லங்கா திலக சந்திரப்புலி மாட்டின் அவர்கள்

(18) சந்தலங்காவை, கலகெதரையைச் சேர்ந்த வடனகனுகே கிரிகோரிஸ் பர்நாந்து அவர்கள்

(19) கோனுவிலே, மதுறுகமுவையைச் சேர்ந்த விஜேசிங்க ஆரச் சில்லாகே குணரத்தின அவர்கள்

(20) சந்தலங்காவை, கெமுடாவையைச் சேர்ந்த எதிரிப்புலிகே ஜினதாச அவர்கள்

(21) சந்தலங்காவை, கெண்டியகலேயைச் சேர்ந்த ராஜபக்சமுதியஞ் சேலாகே எஸ்பின் சிஞ்ஞோ அவர்கள்

(22) கோனுவிலே, வில்கெதரையைச் சேர்ந்த கேமதிலக குணசிறி ஜயசிங்க அவர்கள்

(23) கோனுவிலே, நாலவலானேயைச் சேர்ந்த பியுஸ்விலகே பீரிஸ் சிஞ்ஞோ அவர்கள்

(24) வெல்பன்னே, நாகமை, ரத்தலானேயைச் சேர்ந்த அதிகாரி ஆரச்சிகே சுமதிபால அவர்கள்

(25) வெலிபென்னகாமுல்லே, பன்னரையைச் சேர்ந்த கேரத் முதியஞ்சேலாகே பொடிஅப்புகாமி அவர்கள்

(26) கோனுவிலே, எலிவில்லைச் சேர்ந்த கேரத் முதியஞ்சேலாகே விமலசேன அவர்கள்

(27) சந்தலங்காவையைச் சேர்ந்த சுபசிங்க முதியஞ்சேலாகே எசொன் சுபசிங்க அவர்கள்

(28) லீகிரியாகமை, சந்திராபொலேயைச் சேர்ந்த கருசிங்க தேவகே எல்பானிஸ் அவர்கள்

(29) கோனுவிலே, எரமுழவையைச் சேர்ந்த கேரத் முதியஞ்சேலாகே சனீ விஜேசேகர அவர்கள்

(30) வெல்பன்னே, ராவிட்டையைச் சேர்ந்த இமியா முதியஞ்சே லாகே ஜினதாச அவர்கள்

(ஆ) கோனுவிலே, மாகந்துறையைச் சேர்ந்த சமரப்புலி ஆரச்சிகே பியசேன அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராக விருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1972, திசம்பர் 23 ஆம் நாள்.
1–555/2

---

**வாடிவீடுகள் சட்டம்**

1972, திசெம்பர் 8 ஆம் தேதிய 37 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை)க் குடியரசு கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வாடிவீடுகள் சம்பந்தமாக வாடிவீட்டு விதிகளின் குடிவகை விலைப்பட்டியலின் அட்டவணையின் கீழ் சாராய விற்பனை வீதக் கட்டணங்களும், அரசாங்க அதிபர்களிடம் உரித்தாக்கப் பட்ட அவற்றின் கட்டுப்பாடுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை யில் உள்ளவாறு திருத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட கட்டணங்கள் அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச் சரினுல் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன் 1973, சனவரி 1 ஆம் தேதி யிலிருந்து அமுலுக்குவரும்.

பீ. மகாதேவா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு சனவரி மீ 3 ந உ.

**அட்டவணை**

**குடிவகை விலைப்பட்டியல்**

| சாராயம் | 1 டிராம் | ½ டிராம் |
|---|---|---|
| மென்டிஸ் விசேட சாராயம் .. | 5 0 | 2 50 |
| இரு வடி சாராயம் .. .. | 5 0 | 2 50 |
| மிக விசேட சாராயம் .. .. | 2 60 | 1 30 |
| இலங்கை சாராயம் .. .. | 2 10 | 1 05 |
| விசேட சாராயம் .. .. | 1 10 | 0 55 |
| பாகுச் சாராயம் .. .. | 1 10 | 0 55 |

1–462

எல். டி. பி. 68/50

இதனோடுள்ள அட்டவணையின் நிரை I இல் குறிப்பிடப்பட்ட அமைச்சர்கள், எப்பொழுதாவது அவசியமேற்படும் பொழுது, அட்டவணையின் நிரை II இல் ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களை அவ்வட்டவணையின் III ஆம் நிரையின் ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு நியமிக்க (2 ஆம் அத்தியாயமான) பொருட் கோடற் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் எனக்கு அதிகாரமளித்துள்ளனர் எனப் பொதுமக்களின் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1950 யூலை 14 ஆம் திகதிய 10,123 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட 1950, யூலை 7 ஆம் திகதிய அறிவித்தல், அவ்வறிவித்தலின் கீழ் ஏற்கெனவே செய்யப்பட்ட நியமனங்களுக்குப் பங்கமின்றி, இத்தால் நீக்கப்படுகின்றது.

கொழும்பு,
1973 ம் ஆண்டு சனவரி மீ 1 ந் உ.

செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

அட்டவணை

| 1 | II | III |
|---|---|---|
| 1. வெளிநாட்டு, உள்நாட்டு வியாபார அமைச்சர் | அரசாங்க முகவர்கள், மேலதிக அரசாங்க முகவர்கள், அரசாங்க முகவர்களின் அலுவலக உதவியாளர்கள் | தகர்வுப் பொருட் பெறுநர்கள் |
| | அரசாங்க முகவர்களும் மேலதிக அரசாங்க முகவர்களும் .. | நிறுவைகள், அளவைகள் கண்காணிப்பாளர்கள் |
| 2. கப்பற்றொழில், உல்லாசப் பிரயாண அமைச்சர் | யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் அரசாங்க முகவர்கள் | பிரதித் துறைமுகத் தலைவர்கள் |
| | யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் மேலதிக அரசாங்க முகவர்கள் அல்லது அரசாங்க முகவர்களின் அலுவலக உதவியாளர்கள் | உதவித் துறைமுகத் தலைவர்கள் |
| 3. நிதி அமைச்சர் .. | அரசாங்க முகவர்கள், மேலதிக அரசாங்க முகவர்கள், உதவி அரசாங்க முகவர்கள், அரசாங்க முகவர்களின் அலுவலக உதவியாளர்கள் | சுங்கச் சேகரிப்பாளர்கள் அல்லது உதவிச் சுங்கச் சேகரிப்பாளர்கள் அல்லது மேலதிகச் சுங்கச் சேகரிப்பாளர்கள் அல்லது இறக்குமதி அளவையாளர்கள் |
| 4. நீதி அமைச்சர் .. | கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி நிருவாக மாவட்டங்களின் அரசாங்க முகவர்கள் | அவர்களுடைய மாகாணங்களின் பிசுக்கால்கள் |
| | அரசாங்க முகவர்கள், மேலதிக அரசாங்க முகவர்கள், உதவி அரசாங்க முகவர்கள், அரசாங்க முகவர்களின் அலுவலக உதவியாளர்கள் அல்லது மேலதிக அலுவலக உதவியாளர்கள் | அவர்களின் நிருவாக மாவட்டங்களின் பிரதிப் பிசுக்கால்கள் |

1–477

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## களுத்துறை வடக்கு சிரிசுமங்கள வீதி புகையிரதக் கடவையில் வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல்

மேற்கூறிய புகையிரதக் கடவையில் எச்சரிக்கும் மணியுடன் மின்மணி சிவப்பு வெளிச்சவகையிலுள்ள புகையிரத பாதுகாப்பு அமைக்கப்பட்டுள்ளது.

2. மின்மணி சிவப்புச் சைகை தண்டவாளத்திலிருந்து 10 அடி தூரத்தில் வாகனச் சாரதிகளின் வலது பக்கத்தில் இடையாக பொருத்தப்பட்டு இருப்பதுடன் இக்கம்பத்திலிருந்து 10 அடி தூரத்தில் நிறுத்தும் கோடு (Stop line)) என அழைக்கப்படும் வெள்ளைக் கோடு வீதிக்கு குறுக்கே வரையப்பட்டிருக்கிறது.

3. ஒரு புகையிரதம் 300 யாருக்கு உள்ளேயும் எந்தப் பக்கத்தில் இருந்தும் புகையிரதக் கடவையை நோக்கி வருமானால் மின்மணி விளக்கு எரியத் தொடங்குவதுடன் பார்வைச் சைகையுடன் மேலதிகமாக கேட்கக்கூடிய எச்சரிக்கும் மணி தொடர்ந்து அடிப்பதனால் கிடைக்கும் மணி அடிப்பதும் சைகை நின்றொளிர்வதும் நிற்கும்வரை எந்த வாகனப் போக்குவரத்தும் நிறுத்தற் கோட்டிற்கு அப்பால் செல்லக்கூடாது.

4. எப்போதாவது சைகையும் மணியும் பழுதுபட்டிருந்தால் எல்லா வாகனச் சாரதிகளும் புகையிரதக் கடவையைக் கவனமாகக் கடப்பதுடன் ஏதாவது கைச் சைகை காட்டப்பட்டால் அவற்றிற்கு கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்.

நெடுஞ்சாலை அதிபருக்காக.

1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 6 ந் உ.

1–320

## கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

## 277(3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்

## லயன் டேவர்ஸ் அன்ட் றிசோட்ஸ் லிமிரட்

லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1967.4.4 இல் கூட்டப்பெற்ற லயன் டேவர்ஸ் அன்ட் றிசோட்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செயயவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாத விடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர லிக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277(3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் லயன் டேவர்ஸ் அன்ட் றிசோட்ஸ் லிமிரட் இன் பெயர் இத்திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப் பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. லி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1972 ம் ஆண்டு டிசெம்பா மீ 18 ந் உ.

1–379

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினுல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி | 5. 1.73 | வெள்ளி | 29.12.72 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 12. 1.73 | வெள்ளி | 5. 1.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 19. 1.73 | வெள்ளி | 12. 1.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 26. 1.73 | வெள்ளி | 19. 1.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி | 2. 2.73 | வெள்ளி | 26. 1.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 9. 2.73 | வெள்ளி | 2. 2.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 15. 2.73 | வியாழன் | 9. 2.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 23. 2.73 | வெள்ளி | 15. 2.73 | வியாழன் | ந. ப. | 12.00 |
| மாச்சு | 2. 3.73 | வெள்ளி | 23. 2.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி | 2. 3.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி | 9. 3.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி | 16. 3.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி | 23. 3.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| ஏப்பிறில் | 6. 4.73 | வெள்ளி | 30. 3.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 11. 4.73 | புதன் | 6. 4.73 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 19. 4.73 | வியாழன் | 11. 4.73 | புதன் | ந. ப. | 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி | 19. 4.73 | வியாழன் | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வெ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.